DEPOSITION OF WITNESS
CHAPTER ORDER XVIII CODE OF CIVIL PROCEDURE
IN THE COURT OF DISTRICT MUNSIF, AUNDIPATTI
O.S. No. 109 /2021

Deposition of Witness : DW2

| | | | |
|---|---|---|---|
| Name | : பழனிச்சாமி | Father's/Husband's Name : | கோபால் |
| Village | : கன்னியப்பபிள்ளைபட்டி | Taluk | : ஆண்டிபட்டி |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : 74 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.04.2026

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) வாதி என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல செய்துள்ளார் என்றால் சொத்தில் பங்கு கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார். 2 லக்க சொத்திற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார். 1 வது லக்க சொத்தின் சர்வே எண். 187/2. அதன் விஸ்தீரணம் 91 செண்ட். 1 வது லக்க சொத்து எனக்கு மட்டும் தனித்து பாத்தியப்பட்டது. அதன் நான்கு மால் தெரியும். வடக்கே – அழகர்சாமி இடம், தெற்கே – பூசாரி மானிய நிலம், மேற்கே – தார் ரோடு, கிழக்கே – அழகர்சாமி நிலம். 2 வது லக்க சொத்தின் சர்வே எண். 187/3. அதன் விஸ்தீரணம் 61 செண்ட். மேலே சொல்லியுள்ள நான்குமாலுக்குள் தான் 2 வது லக்க சொத்து கட்டுப்பட்டுள்ளது. எனது அம்மா பெயர் உண்ணாமலையம்மாள் என்றால் சரிதான். எனது அம்மாவின் அப்பா பெயர் பெருமாள் கவுண்டர். வழக்கு சொத்துக்கள் ஆதியில் பெருமாள் கவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.

2) பெருமாள் கவுண்டருக்கு உண்ணமாலையம்மாள் மட்டும் தான் மகள் என்றால் சரிதான். பெருமாள் கவுண்டர் எப்போது இறந்தார் என்றால் சரியாக ஞாபகம் இல்லை, 60–70 வருடங்கள் இருக்கும். பெருமாள் கவுண்டர் எனது அம்மா பெயருக் குதாவா சொத்துக்களை பொறுத்து ஆவணங்களை எழுதி கொடுத்திருக்கிறாரா என்றால் அது தெரியாது, சீதனமாக கொடுத்தார். உண்ணாமலையம்மாள் – கோபால் கவுண்டருக்கு என்னோடு சேர்த்து மொத்தம் 3 ஆண் மக்கள். எனது அண்ணன் தனுஷ்கொடி இறந்து விட்டார். எனது தம்பி உயிருடன் தான் இருக்கிறார். வழக்கில் 1 வது அயிட்ட சொத்தை எனது அம்மா ராமசாமி என்பவருக்கு 1982 ம் வருடம் கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி சொத்தை கிரையத்தில் கிடைத்த பணத்தை வைத்து தான்

ராஜகோபாலன்பட்டியில் உள்ள இடத்தை எனது மக்கள் எனது பெயரில் கிரையம் வாங்கினார்கள் என்றால் சரியல்ல, நான் எனது சுயசம்பாத்தியத்தில் வாங்கிய சொத்து.

3) எனது அம்மா இறந்து 30 வருடகளுக்கு மேல் இருக்கும். எனது அப்பா கோபால் கவுண்டர் இறந்து 40 வருடங்கள் இருக்கும். எனது பெற்றோர்கள் இறந்த பிறகு எங்கள் அண்ணன் தம்பிக்குள் பாகம் பிரிவினை செய்து கொண்டோமா என்றால் என் பெற்றோர் உயிருடன் இருக்கும்போதே எனது அப்பா உயில் ஆவணம் எழுதி கொடுத்துவிட்டார். மேற்படி உயில் ஆவணத்தை எழுதி கொடுக்க எனது தந்தைக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. எனது அம்மா எனது அப்பா பெயரில் எந்த ஆவணமும் எழுதி கொடுக்கவில்லை. தாவா சொத்துக்கள் இரண்டும் எனது அம்மாவிற்கு பாத்தியப்பட்டது என்பதால் அந்த சொத்துககள் சம்பந்தமாக உயில் எழுதி வைக்க எனது தந்தைக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. எனது தாயார் 1982ம் தேதி எனது அம்மா ராமசாமிக்கு கிரையம் கொடுத்த சொத்தை நான் 1988ம் ஆண்டு எனது பெயருக்கு கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான், அது எனது சுய வருமானத்தை வைத்து வாங்கினேன்.

4) நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வந்தேன், அதில் வந்த வருமானத்தை வைத்து கிரையம் வாங்கினேன். ரியல் எஸ்டேட் செய்த பணத்தை வைத்து தான் தாவா சொத்தைகிரையம் வாங்கினேன் என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 1988ம் ஆண்டு ரியல் எஸ்டேட் தொழில் பெரிதளவில் இல்லைஎன்றாலும் எனவே நான் அந்த வருமானத்தை வைத்து தாவா சொத்தை கிரையம் வாங்கியிருக்க முடியாது என்றால் சரியல்ல. வாதி 2016ம் ஆண்டு சொத்துக்களை பிரித்து கொடுக்கும்படி என்னிடம் கேட்டார் என்றால் சரிதான். எனது மனைவி இறந்து 10 வருடங்களுக்கு மேல் ஆகியும், வாதி எனக்கு எதுவும் செய்யாததால் எனது இளைய மகனுக்கு தான் சொத்து என்றும், வாதிக்கு சொத்து கிடையாது என்று சொல்லிவிட்டேன். நான் சொத்துக்களை பிரித்து கொடுக்க மறுத்ததால் தான் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறார் என்றால் சரிதான்.

5) தாவா சொத்துக்களை எனது இளைய மகன் ராஜகிருஷ்ணன் பெயருக்கு 2017ம் ஆண்டு தானம் எழுதி கொடுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. தாவா 2 அயிட்ட சொத்துக்களும் எனக்கு தனித்து பாத்தியப்பட்ட சொத்துக்கள் தான். எனது குடும்பத்தில் நான் மூத்தவர் என்பதால் எங்கள் கூட்டுக்குடும்ப வருமானத்தை வைத்து

குடும்பத்தினர் அனைவரும் சேர்ந்து எனது பெயரில் 1 வது அயிட்ட சொத்தை கிரையம் வாங்கினோம் என்றால் சரிதான். தாவா 2 வது லக்க சொத்து எனது பூர்வீக சொத்துக்கள் என்பதால் அதில் வாதிக்கு பாகம் இருக்கிறது என்றால் சரியல்ல. வாதிக்கு தாவா சொத்தில் பாகம் கொடுக்கக் கூடாது என்பதற்காக தான் 6 ம் பிரதிவாதி பெயரில் தான பத்திரம் எழுதி கொடுத்துவிட்டேன் என்றால் சரிதான், வாதி என்னை பார்த்து கொள்ளாததால் தான் ராஜகிருஷ்ணன் பெயரில் எழுதி வைத்துவிட்டேன்.

6) நான் 6 ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரம் ஆரம்ப நிலையிலிருந்தே செல்லாது என்றால் சரியல்ல. ராஜகிருஷ்ணன் வாதியின் மீது இந்த நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளாரா என்றால் இல்லை. ராஜகிருஷ்ணன் தாக்கல் செய்துள்ள வழக்கில் நான் சாட்சியம் அளித்திருக்கிறேன் என்றால் சரிதான். வழக் கு தாக்கல் செய்த பிறகு வாதி என்னிடம் தாவா சொத்தை பிரித்து கொடுக்க சொல்லி கேட்டாரா என்றால் இல்லை. மேற்படி வழக்கு நிலுவையில் இருக்கும்போது தாவா சொத்தின் ஒரு பகுதியை காற்றாலை கம்பெனிக்கு பாதைக்காக ஒரு வருட ஒப்பந்தம் செய்து கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த ஒப்பந்தத்தில் வந்த பணத்தில் ஒரு பங்கை வாதி என்னிடம் கேட்டாரா என்றால் ஆமாம், காவல் நிலையத்தில் புகார் கொடுத்து கேட்டார். அந்த புகாரின் பேரில் என்னை விசாரணை செய்தார்கள். அந்த விசாரணையில் எனது சொத்தை நான் எழுதி கொடுத்திருக்கிறேன் அது சம்பந்தமாக வாதி எந்த கேள்வியும் கேட்க முடியாது என்று சொல்லிவிட்டேன். வாதி கோரியுள்ளபடி தாவா சொத்துக்களில் அவருக்கு 1/7 பாகம் இருக்கிறது என்றாலும் அதை மறைத்து இந்த வழக்கில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

Taken down by me/before me in open court on 09.04.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

E SUGANTHAN Digitally signed by E SUGANTHAN Date: 2026.04.09 17:00:16 +0530

District Munsif,
Aundipatti.